**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**

**THIRUVIDAIMARUTHUR**

| | | | |
|---|---|---|---|
| Calender | : | | |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : CC 29/2021 | | |
| Sessions | : | | |
| Deposition of Witness for | : LW-6/PW- 3 | Village: | |
| Name | : சாதிக் பாட்ஷா | Age | :50 |
| Father's/Husband's Name | : முகமது சுல்தான் | Taluk | : |
| Nationality | : Indian | Religion | : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 13/10/2023**

சாட்சியை திருவிடைமருதூர் தலைமை காவலர் திருமதி.ரமா என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**1 மற்றும் 2 எதிரி ஆஜரில் இருந்தார்கள்.**

**முதல் விசாரணை**:

நான் தற்போது திருபுவனத்தில் வசித்து வருகிறேன். நான் ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். கடந்த 2010ம் வருடம் ஒருநாள் நான் திருபுவனம் ஆட்டோ ஸ்டான்ட்டில் இருந்தபோது திருவிடைமருதூர் போலிசார் வந்து அங்கு நடந்த பிரச்சனை பற்றி தெரியுமா என்று கேட்டார்கள். நான் தெரியாது என்று சொல்லிவிட்டேன். என்னிடம் ஒரு கையொப்பம் வாங்கி கொண்டார்கள். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். (**பார்வை மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ) போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(அரசு தரப்பு சாட்சி அரசுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் இந்திய சாட்சிய சட்டம் 154 பிரிவின் படி சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அரசு தரப்பின் வேண்டுகோளுக்கிணங்க அரசு தரப்பில் சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது)**

**<u>அரசு தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

போலிசார் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் கடந்த 19/10/2010 ம் தேதி இரவு 07.30 மணிக்கு வழக்கின் சம்பவ இடம் அருகே நானும் முகம்மது யூசுப் என்பவரும் இருந்தபோது, திருவிடைமருதூர் போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகசர் தயார் செய்து, எங்களிடம் சாட்சி கையொப்பம் பெற்றார்கள் என்றும், போலிசார் விசாரித்தார்கள் என்றும் சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

நான் எழுதிய பேப்பரில் கையொப்பம் செய்தேனா அல்லது எழுதாக பேப்பரில் கையொப்பம் செய்தேனா என்றால் எழுதாத பேப்பரில் கையொப்பம் செய்தேன்.

**<u>மறுவிசாரணை</u>** இல்லை

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

N SIVAPALANI
Digitally signed by N SIVAPALANI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர்.**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**
**THIRUVIDAIMARUTHUR**

| | | | |
|---|---|---|---|
| Calender | : | | |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : CC 29/2021 | | |
| Sessions | : | | |
| Deposition of Witness for | : LW-4/PW- 2 | Village: | |
| Name | : பாரத் | Age | :33 |
| Father's/Husband's Name | : மோகன்ராம் | Taluk | : |
| Nationality | : Indian | Religion | : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 13/10/2023**

சாட்சியை திருவிடைமருதூர் தலைமை காவலர் திருமதி.ரமா என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**1 மற்றும் 2 எதிரி ஆஜரில் இருந்தார்கள்.**

**முதல் விசாரணை**:

நான் தற்போது திருபுவனத்தில் வசித்து வருகிறேன். நான் ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். சுமார் 12 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் திருவிடைமருதூரில் இருந்து அம்மாச்சத்திரத்திற்கு எனது ஆட்டோவில் சென்றுகொண்டிருந்தபோது திருபுவனம் ஆட்டோ ஸ்டான்ட் அருகே கூட்டமாக இருந்தது. என்ன பிரச்சனை என்று தெரியவில்லை. வேறு எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பு சாட்சி அரசுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் இந்திய சாட்சிய சட்டம் 154 பிரிவின் படி சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அரசு தரப்பின் வேண்டுகோளுக்கிணங்க அரசு தரப்பில் சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது)**

**அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

போலிசார் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் கடந்த 18/10/2010 ம் தேதி மாலை சுமார் 05.00 மணியளவில் திருபுவனம் கடையில் இருந்தபோது TN45 N 3053 என்ற பதிவெண் கொண்ட அரசு பேருந்து சென்னையில் இருந்து திருச்சி நோக்கி சென்றுகொண்டிருந்ததை ஆஜர் எதிரிகள் பேருந்தை வழிமறித்து, ஓட்டுநரிடம் தகராறு செய்து, அரசு ஊழியரை கல்லால் அடித்தும், பின்பு பேருந்தின் முன்பக்க சைடு கண்ணாடியை உடைத்து ரூ.2000/- சேத மதிப்பை ஏற்படுத்தினார்கள் என்றும், இச்சம்பத்தை நான் நேரில் பார்த்தேன் என்றும், சொல்லிவிட்டு தற்போது நடந்த சம்பவத்தை மறைத்து எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை.**

கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். குறுக்கு விசாரணை இல்லை என்று கூறப்பட்டு குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கைெயொப்பம் செய்தார்.

N SIVAPALANI Digitally signed by N SIVAPALANI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர்.**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**

**THIRUVIDAIMARUTHUR**

| | |
|---|---|
| Calender : <br> Miscellaneous : <br> Preliminary Register : CC 29/2021 <br> Sessions : <br> Deposition of Witness for : LW-3/PW-1 <br> Name : செந்தில் <br> Father's/Husband's Name : லட்சுமணன் <br> Nationality : Indian | Village: <br> Age :52 <br> Taluk : <br> Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 13/10/2023**

சாட்சியை திருவிடைமருதூர் தலைமை காவலர் திருமதி.ரமா என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**1 மற்றும் 2 எதிரி ஆஜரில் இருந்தார்கள்.**

**முதல் விசாரணை**:

நான் தற்போது திருபுவனத்தில் வசித்து வருகிறேன். நான் ஜெராக்ஸ் கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். இவ்வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பு சாட்சி அரசுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் இந்திய சாட்சிய சட்டம் 154 பிரிவின் படி சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அரசு தரப்பின் வேண்டுகோளுக்கிணங்க அரசு தரப்பில் சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது)**

**அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

போலிசார் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் கடந்த 18/10/2010 ம் தேதி மாலை சுமார் 05.00 மணியளவில் திருபுவனம் கடையில் இருந்தபோது TN45 N 3053 என்ற பதிவெண் கொண்ட அரசு பேருந்து சென்னையில் இருந்து திருச்சி நோக்கி சென்றுகொண்டிருந்ததை ஆஜர் எதிரிகள்

பேருந்தை வழிமறித்து, ஓட்டுநரிடம் தகராறு செய்து, அரசு ஊழியரை கல்லால் அடித்தும், பின்பு பேருந்தின் முன்பக்க சைடு கண்ணாடியை உடைத்து ரூ.2000/- சேத மதிப்பை ஏற்படுத்தினார்கள் என்றும், இச்சம்பத்தை நான் நேரில் பார்த்தேன் என்றும், சொல்லிவிட்டு தற்போது நடந்த சம்பவத்தை மறைத்து எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை.**

கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். குறுக்கு விசாரணை இல்லை என்று கூறப்பட்டு குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

N SIVAPALANI Digitally signed by N SIVAPALANI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர்.**